(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.1/2015 |
| Deposition Of Witness for | : | PW4 |
| Name | : | **Tr. Vairamuthu** |
| Father's/Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **21st February 2024.**

(1 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையாவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u> :

1. நான் தற்போது சிவகங்கை மாவட்டம் பூலாங்குறிச்சி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 2012 ம் வருடம் மித்ரா வயல் குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். என்னிடம் காட்டப்படும் அ.த.சா.ஆ. 13 ல் உள்ள 12.09.2012 ம் தேதியிட்ட கடிதம் என்னால் வழங்கப்பட்டதாகும்.

2. சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவிலிருந்து சண்முகசுந்தரம், அவரது மனைவி பாக்கியலட்சுமி, மகன்கள் பார்த்திபன், பகீரதன், அவரது மகள் ஆகியோரின் பெயரில் மித்ரா வயல் குரூப்பில் உள்ள நன்சை புஞ்சை நிலங்களின் விபரங்களை காரைக்குடி வட்டாட்சியருக்கு கேட்டு அதனடிப்படையில் மித்ரா வயல் உள்வட்ட வருவாய் ஆய்வாளர் என்னிடம் கேட்டார். அதனடிப்படையில் நான் பெரியதம்பி பட்டா எண்.559, க.பெரியதம்பி பட்டா எண்.557, குப்புசாமி பட்டா எண் .248 , பெ.குப்புசாமி பட்டா எண்.893, வள்ளிவீரன் பட்டா எண்.802, சின்னத்தம்பி வகை பட்டா எண்.240, குணசேகரன் பட்டா எண்.241 ஆகிய இடங்களுக்குரிய பசலை மற்றும் அடங்கள் நகல்கள் வருவாய் ஆய்வாளரிடம் சமர்ப்பித்தேன். நான் ஒரு மாத காலம் தான் மித்ரா

வயல் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தேன். என்னிடம் மேற்கண்ட விபரம் தான் கேட்கப்பட்டது. அதனைத் தான் நான் கொடுத்தேன்.

3. என்னிடம் காட்டப்படும் அ.த.சா.ஆ.3, 4, 5 ஆகிய ஆவணங்களில் கையொப்பம் செய்துள்ள கிராம நிர்வாக அலுவலர் வேறு ஒருவர் ஆவார். அதில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் நான் அங்கு பணியில் இல்லை. என்னை ஊழல் தடுப்பு கண்காணிப்பு போலீசார் வழக்கு தொடர்பாக விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:</u>**

என்னிடம் காட்டப்படும் அ.த.சா.ஆ.13 ன் படி மித்ரா வயல் கிராமத்தை சேர்ந்த முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள நபர்களின் சொத்துகள் குறித்துதான் பசலி மற்றும் அடங்கல் விபரங்கள் அளித்துள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் சண்முகசுந்தரம் மற்றும் பாக்கியலட்சுமி அவர்களது மகன்கள் பார்த்திபன், பகீரதன் மகள் அகிலாண்டேஸ்வரி ஆகியோர்களின் சொத்து சம்பந்தமாக என்னிடம் காரைக்குடி வட்டாட்சியரோ லஞ்ச ஒழிப்பு போலீசாரோ என்னிடம் உள்ள கிராமக் கணக்குகளை கேட்கவில்லை என்றால் சரிதான். நான் மித்ரா

வயல் குரூப்பில் செப்டம்பர் மாதம் 2012 ஆம் ஆண்டு ஒரு மாதம் மட்டும் பணியாற்றினேன். இந்த ஒரு மாத காலத்தில் அந்த குரூப்பில் உள்ள விவசாயிகளின் எந்த நிலத்தையும் நான் பார்வையிடவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளின் நிலங்களை நான் பார்வையிட்டேனா என்றால் இல்லை. அதனால் எதிரிகளின் அந்த நஞ்சைகள் மற்றும் புஞ்சைகளில் என்ன விவசாயம் இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.த.சா.ஆ 13 ல் கண்ட நபர்களைப் பற்றி நான் புலன் விசாரணை அதிகாரி விசாரிக்கும் போது சொல்லவில்லை என்றால் சரிதான்.

<u>**மறுவிசாரணை**</u> : இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Location: Sivagangai
Date: 2024.02.21 14:42:55 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.